**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051887

1. District மாவட்டம் : Tiruvannamalai   PS: காவல்நிலையம் V&AC   Year: ஆண்டு 2022   FIR No.: மு.த.அ. எண் 10/2022   Date: நாள் 27.09.2022

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.**   Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 23.09.2022   Date to : நாள் வரை 26.09.2022
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.09.2022   Time : நேரம் 0800 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III   Time : நேரம் 0930 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்   **0.5 Kms West**
   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி **Water Resources Department Assistant Geologist Office, Tiruvannamalai.**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.L.Liyagath Ali**   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.VPM.Lal**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-46**   (d) Nationality : நாட்டினம் **Indian**   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் **Partner of Girivala Industries Water Purifying Company**   (g) Address : முகவரி **Puthu Vaniyangkulam Street, Tiruvannamalai Town & Taluk, Tiruvannamalai District**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **Tr.Sinthanaivalavan, Assistant Geologist Office, Water Resources Department Tiruvannamalai.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்   ------

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

------

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ------

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ------

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 27.09.2022 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் ட.லியாகத் அலி, வயது-46, த/பெ.VPM.லால், புது வாணியங்குளத்தெரு, திருவண்ணாமலை என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : விடுநர் ட.லியாகத் அலி, வயது-46, த/பெ.VPM.லால், புது வாணியங்குளத்தெரு, திருவண்ணாமலை. செல்:9791283158. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. ஐயா, நான் திருவண்ணாமலை நகரம் புதுவாணியங்குளத்தெருவில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி இரண்டு மகள்களும், ஒரு மகனும் உள்ளனர். நான் வேலூர் சாலையில் உள்ள தீபம் நகரில் VPM.லால் பட்டாசு கடை என்ற பெயரில் பட்டாசு கடை நடத்திவருகிறேன்.

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

L. Liyakhat ali 27/9/2022 — [signature] 27.09.2022.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
10.45 hrs

Name: பெயர் S. VELMURUGAN
Rank: நிலை DSP VAC TVM No. எண் ..........

கடந்த 2019 ஆம் ஆண்டு எனது தாயார் திருமதி.ஷகிலா மற்றும் எனது உடன் பிறந்த சகோதரர் சௌகத் அலி, எனது தம்பி முகமது ஜின்னா மற்றும் லியாகத் அலி ஆகிய நானும் வேங்கிக்கால் கிராம சர்வே எண்.258/1-ல் லால் பார்க் காஞ்சி மெயின் ரோடு அருகில் உள்ள 7208 சதுர அடிகள் கொண்ட காலிமனையை வாடகை ஒப்பந்தப்பத்திரத்தை இனாம் காரியந்தலை சேர்ந்த திருமதி.M.நாகமணி என்பவருக்கு தண்ணீர் சுத்திகரிப்பு தொழில் நடத்த அடிமனையை மாதவாடகைக்கு திருவண்ணாமலை சார்பதிவாளர்-2 அலுவலக ஆவண எண்.4303/2019 ல் கண்டவாறு பதிவு செய்து ஒப்பந்தம் செய்து கொண்டோம். அதில் லியாகத் அலியாகிய நானும், வாடகை ஒப்பந்ததாரர் திருமதி.நாகமணி மற்றும் திரு.காமராஜ் ஆகிய மூவரும் சேர்ந்து கிரிவலா இண்டஸ்ட்ரீஸ், எண்.1532, லால் பார்க், காஞ்சி ரோடு, வேங்கிக்கால் என்ற பெயரில் பார்ட்னர்களாக கூட்டு ஒப்பந்தம் செய்து தண்ணீர் சுத்திகரிப்பு தொழில் நடத்திவருகிறோம். இதில் பார்ட்னர் திருமதி.நாகமணி என்பவர் பெண் என்பதால் அவர் நிர்வாக விஷயங்களில் தலையிடுவதில்லை. மேலும் திரு.காமராஜ் என்பவர் இப்பணியில் ஏற்கனவே முன் அனுபவம் கொண்டவர் என்பதால் அவர் தண்ணீர் சுத்திகரிப்பு சார்ந்த பணிகளை கவனித்துக்கொண்டு அங்கேயே மேலாளராக பணிபுரிந்து வருகிறார். நான் அலுவலக வெளிவேலை மற்றும் மார்க்கெட்டிங் பிரிவு ஆகியவற்றை கவனித்துக்கொள்வேன். மேலும் அரசு வழிகாட்டுதலின்படி, நிலநீர்எடுப்பு உரிமம் அனுமதி பெறுவதற்காக கடந்த 15.09.2022 ஆம் தேதி அரசு கட்டணமாக ரூ.6,000/- ஐ பேங்க் ஆப் பரோடா வங்கி, திருவண்ணாமலை கிளையில் வரைவு காசோலை பெற்று தலைமைப்பொறியாளர், SG&SWRDC, தரமணி, சென்னை அவர்களுக்கு விண்ணப்பித்து இருந்தேன். இதுசம்பந்தமாக திருவண்ணாமலை நீர்வளப்பிரிவு அலுவலகத்தில் உதவி நிலவியலாளராக பணிபுரிந்துவரும் திரு.சிந்தனைவளவன் என்பவர் கடந்த 23.09.2022 ந் தேதி மாலை சுமார் 5 மணியளவில் எங்களது கிரிவலா இண்டஸ்ட்ரீஸ் நிறுவன வளாகத்திற்கு வந்து நிறுவனம் அமைந்துள்ள இடத்தை கள ஆய்வு செய்தார். அப்போது நானும் மேலாளர் திரு.காமராஜும் இருந்தோம். பின்னர் என்னிடம் நிலத்தடிநீர் எடுப்பதற்கான அனுமதி உரிமம் வழங்க மேலதிகாரிகளுக்கு பரிந்துரை செய்ய அவருக்கு லஞ்சமாக மூன்றரை லட்சம் பணம் கொடுக்கவேண்டும் எனவும், அப்போதுதான் சென்னை தலைமை அலுவலகம் வரை பேசி அனுமதி பெற்றுத்தருவேன் என்றும் கூறினார். அதற்கு நான் இவ்வளவு தொகை அதிகமாக உள்ளது. எனவே கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு அவர் முதல் தவணையாக இரண்டு லட்சம் கொடுக்கவேண்டும் என்றும் 15 நாட்கள் கழித்து மீதி ஒன்றரை லட்சம் கொடுக்க வேண்டும் என்றும் கறாராக சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டார். பின்னர் நேற்று 26.09.2022 ந் தேதி காலை சுமார் 10.45 மணியளவில் அவருக்கு நான் போன் செய்து அவ்வளவு பணத்தை உடனே ரெடி செய்ய முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் முதற்கட்டமாக ஐம்பதாயிரம் தயார் செய்துவைத்துக்கொள் என்றும், 27.09.2022-ந் தேதியன்று கிரிவலா இண்டஸ்ட்ரீஸுக்கு வந்து வாங்கிக்கொள்வதாகவும், மீத தொகையை நிலநீர் எடுப்பு அனுமதி உரிமம் கிடைத்தவுடன் இரண்டு

தவணைகளாக அவரிடம் கொடுக்க வேண்டும் என்றும் கறாராக சொன்னார். மேலும் அவ்வாறு பணம் கொடுக்காவிட்டால் உங்கள் நிலநீர் எடுப்பு அனுமதி உரிமத்தை பரிந்துரை செய்ய முடியாது என்றும் கூறினார். எனவே நிலநீர் எடுப்பு அனுமதி உரிமத்திற்கு பரிந்துரை செய்ய முதல்தவணையாக லஞ்சமாக கேட்ட பணம் ரூ.50,000/-ஐ உதவி நிலவியலாளர் திரு.சிந்தனைவளவன் என்பவருக்கு லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லாததாலும், என்னிடம் ரூ.50,000/-ஐ லஞ்சமாக கேட்ட திருவண்ணாமலை நீர்வளப்பிரிவு உதவி நிலவியலாளர் திரு.சிந்தனைவளவன் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டி, புகார் மனுவை தட்டச்சு செய்து இன்று 27.09.2022-ந் தேதி திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வந்து புகார்மனு அளிக்கிறேன். நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (SdXXXXXX)

Sir,

Received the complaint on 27.09.2022 at 08.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 27.09.2022 at 09.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.10/2022, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. (Sd/-XXXXX) 27.09.2022. S.Velmurugan, Deputy Superintendent of Police, V&AC, Tiruvannamalai. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned.

27. 09. 2022

DSP, V&AC

TIRUVANNAMALAI.